[1968 மார்ச் 26

* 333 வினா.—திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) குளித்தலை வட்டம், நாகநல்லூர் (தொட்டியப்பட்டி) ஏரியை விவசாயப் பண்ணையாக மாற்றும் திட்டம் ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா?

(இ) ஆம் எனில், எந்நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: (அ) & (இ) திருச்சிராப்பள்ளி மாவட்டம், குளித்தலை வட்டம் நாகநல்லூரில், பயன்படுத்த இயலாதெனக் கைவிடப்பட்ட ஏரியில் 55 ஏக்கர் பரப்பளவில் 1962-ம் ஆண்டு டிசம்பர் திங்களில் அரசாங்க விதைப்பண்ணை ஒன்று தொடங்கப்பட்டது. ஆனால் இப் பண்ணையின் மண் வளமற்றிருப்பதாலும், நீரடிப்பதாலும் இதற்குப் பாசன வசதிகள் செய்யப் பெருந்தொகை செலவழிக்க வேண்டியிருப்பதாலும் இதன் ஆதாயமற்ற நிலைமை காரணமாக இந்தப் பண்ணையை அரசு உடனடியாக மூடும்படி உத்திரவிட்டது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவரவர்களே, அமைச்சரவர்களின் பதிலில் 1962-ல் திட்டமிட்டதாகக் குறிப்பிட்டார்கள். 1962-ம் வருடம் திட்டமிட்ட இந்தப் பண்ணைத் திட்டம் நல்ல முறையில் செயல்படும் என்ற நம்பிக்கையுடன்தான் கடந்த காங்கிரஸ் அரசு செயலாற்றமுற்பட்டது. இப்போது வளம் இல்லையென்றால் அதற்கு அறிக்கை ஏதாவது வந்ததா? அதற்கு யார் காரணம் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: என்னுடைய பதிலிலேயே எதற்காக மூடப்பட்டது என்ற விவரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. பயன்படாத ஏரி ஒன்றில் 55 ஏக்கர் பரப்புள்ள நிலத்தை எடுத்தோம். அது ஏரி என்பதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். நீர் அடிக்கக்கூடிய பகுதி, தண்ணீர் தேங்கக்கூடிய பகுதி, மண்வளம் இல்லாத பகுதி, அரசாங்கம் அவசரப்பட்டு ஏதாவது இடம் கிடைக்க வேண்டும் என்ற நிலையில் ஒரு 55 ஏக்கர் நிலத்தை எடுக்கிறபோது இப்படி 50 ஏக்கர் உள்ளவற்றை ட்வின் பண்ணை என்றும் 25 ஏக்கர் உள்ளவற்றை சிங்கிள் பண்ணை என்றும் சொல்வார்கள்—இந்த 55 ஏக்கர் நிலத்தை அவசரப்பட்டு எடுத்ததன் விளைவாக தொடர்ந்து நஷ்டம் ஏற்பட்டு அதன் விளைவாகத் தான் மூட உத்திரவு போடப்பட்டதே தவிர ஆதாயம் இருக்குமானால், விளைச்சல் இருக்குமானால் மூடப்பட வேண்டிய அவசியம் இருந்திருக்காது. தொடர்ந்து நட்டத்தில் ஓடுவதால், அங்கு நீர் வளம் இல்லாததால், பாசன வசதிக்கு குளித்தலை கட்டளை வாய்க்காலில் இருந்து பைப் மூலம் 6 பர்லாங்குக்கு அப்பாலிருந்து மூடிய பைப்பில் தண்ணீர் கொண்டு வர வேண்டியிருக்கிறது. இங்கு புஞ்சைதான் பயிரிடுகிறார்கள் அது பலனளிக்காததால், பெரும் நட்டம் ஏற்பட்டதால் இது கைவிடப்பட்டது.

[1968 மார்ச் 26

திரு. எஸ். முருகையன்: தலைவரவர்களே, மாநிலத்தில் மொத்தம் எத்தனை விதைப் பண்ணைகள் இருக்கின்றன? அவைகளை மாவட்டவாரியாக அமைச்சரவர்கள் சொல்வார்களா? மொத்தத்தில் எத்தனை விதைப் பண்ணைகள் லாபத்தில் நடக்கின்றன, எத்தனை நட்டத்தில் நடக்கின்றன. அப்படி நட்டத்தில் நடக்கும் விதைப் பண்ணைகளை இலாபகரமாக ஆக்குவதற்கு அரசாங்கம் எடுத்துக் கொண்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: இப்போது மாவட்ட வாரியாகப் பிரித்துச் சொல்வதற்குக் காலதாமதம் ஆகும். இடையிடையில் பல பண்ணைகள் இருக்கின்றன. பெயர் இருக்கிறதே தவிர மாவட்டவாரியாகத் தகவல் இல்லை. மொத்தமாக இப்போது 70 பண்ணைகள்தான் இயங்குகின்றன. கடந்த மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் நிறைய பண்ணைகள் திறந்தார்கள். திறந்த பண்ணைகள் பலவும் மூடியவை போக இப்போது 70 தான் இயங்குகின்றன. அவைகளில் இப்போது 45 பண்ணைகள் இலாபகரமாகவும் 25 பண்ணைகள் நட்டத்திலும் நடந்து கொண்டிருக்கின்றன. நட்டத்திலே நடப்பதற்குக் காரணம் சர்க்கார் புறம்போக்கு நிலங்களை எல்லாம் விதைப் பண்ணைகளுக்காக எடுத்தார்கள். அந்த 25-ல் 16 பண்ணைகள் சர்க்கார் புறம்போக்கு நிலத்திலும், 9 பண்ணைகள் வாங்கப்பட்ட நிலத்திலும் இருக்கின்றன. தரமான நல்ல நிலத்தை வாங்காததனால் அவசரப்பட்டுத் தரமான இடமா என்று பார்க்காததனால் அதிக நட்டம் ஏற்பட்டு இருக்கிறது. இந்த நட்டத்தையெல்லாம் போக்கி நல்ல அளவிலே கொண்டுவர லாபகரமாக இயங்க முயற்சிகள் எல்லாம் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றன. தொடர்ந்து நட்டத்தில் இருந்து வரக்கூடிய நிலை இருக்குமானால் மோசமான பண்ணைகளை மூடுகிற நிலையைத்தான் அரசாங்கம் யோசித்துக் கொண்டிருக்கிறது. ஆறு மாதங்களுக்கு ஒரு முறை விதைப் பண்ணைகள் குறித்து மாநில அளவில் இரண்டு பகுதிகளாக, தென் மாநிலத்தில் ஒரு பகுதியும் வட மாநிலத்தில் ஒரு பகுதியுமாக இரண்டு கூட்டங்கள் கூட்டி, அதுசம்பந்தமாக ஆராய்ச்சியாளர்களையெல்லாம் அழைத்து எதனால் நட்டம் ஏற்படுகிறது என்று பரிசிலனை செய்து பார்க்கிறார்கள். இப்போது அங்கே பணியாற்றும் மானேஜர்களுக்கு எந்தவிதமான அதிகாரமும் இல்லாத அளவுக்கு, விதைப் பண்ணைகளைக் கண்காணிக்கும் அளவுக்குப் பொருளாதார வசதி இல்லாததால், தனியார் பண்ணைகளில் கூலி அதிகமாக இருப்பதாலும், சர்க்கார் பண்ணைகளில் கூலி குறைவாக இருப்பதாலும், தனியார் பண்ணைகளில் பகல் உணவு கொடுப்பதாலும், சர்க்கார் பண்ணைகளில் இந்த நிலை இல்லாததாலும் இன்றையதினம் உற்பத்தி எல்லாம் குறைந்திருக்கிறது. அதனால்தான் நட்டம் ஏற்பட்டிருக்கிறது என்று தகவல் வந்திருக்கிறது. அதையெல்லாம் திருத்தி அமைப்பதற்கான முயற்சிகள்—மானேஜர்களுக்குக் கூடுதலான அதிகாரமும், கூடுதலான பணவசதியும், அவசரம் அவசரமாக அவர்களிடமிருந்து கடிதம் வந்தால் உடனடியாகக் கவனிக்க வேண்டிய ஏற்பாடுகள் புதிதாக மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.